
புவியியல் - க.பொ.த
உ_/த - 2020

காடந்த கால
வினாக்களின் தொகுப்பு

- ❖ வானிலை, காலநிலை
- ❖ காலநிலை மாற்றம்



R.MOHAMED SANOOS

MA(GEOGRAPHY) - EUSL

1. எல்நினோ தோற்றப்பாடு ஆரம்பமாவது,

    1. பசுபிக் சமுத்திரத்தின் கிழக்குப்பகுதியில்
    2. பசுபிக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில்
    3. இந்து சமுத்திரத்தின் கிழக்குப் பகுதியில்
    4. இந்து சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில்
    5. இந்து சமுத்திரத்தின் தென் பகுதியில்

2. கொரியோலிஸ் விசை உருவாகுவதற்குக் காரணமாய் அமைவது

    1. புவியின் சாய்வு 2. புவியின் சுழற்சி
    3. இடைஅயன ஒருங்கல் வலயத்தின் அலைவு
    4. லா நினா தோற்றப்பாடு
    5. நிலம் மற்றும் சமுத்திர மேற்பரப்பின் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள்

3. அவுஸ்திரேலியாவின் வடகிழக்குக் கரைக்கு அப்பால் தோன்றும் அயனப்புயல் எப்பெயரினால் அழைக்கப்படும்?

    1. ஹரிக்கேன் 2. தைபூன் 3. வில்லி வில்லிஸ்
    4. சூராவளி 5. பாகியா

4. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்கள் இரண்டைக் கொண்ட தெரிவு யாது?

    1. எல்நினோ மற்றும் புவி நடுக்கங்கள்
    2. அமில மழை மற்றும் சூராவளி
    3. ஓசோன் படையின் தேய்வு மற்றும் காட்டுத் தீ
    4. சூராவளி மற்றும் சுனாமி
    5. கடல் மட்ட எழுச்சி மற்றும் பாலைவனமாதல்

5. கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டின்படி மத்தியதரைக் காலநிலையினைக் குறித்துக்காட்டும் குறியீடு யாது?

1. BSk 2. Cfa 3. Csa
4. Dfa 5. Dfc

6. ஞாயிற்று அண்மையும், ஞாயிற்று சேய்மையும் முறையே

1. ஜனவரி மற்றும் யூலை 2. யூலை மற்றும் ஜனவரி
3. ஜனவரி மற்றும் ஒக்டோபர்
4. ஒக்டோபர் மற்றும் ஜனவரி 5. யூலை மற்றும் ஒக்டோபர்

7. வளிமண்டலப் ''பொதுச் சுற்றோட்டத்திற்குப்'' பொறுப்பான பிரதான காரணி யாது?

1. நிலத்திற்க்கும் கடலுக்குமிடையில் அமுக்கச்சாய்வில் காணப்படும் வேறுபாடு
2. அகலக்கோடுகளுக்கு மேலாகக் காணப்படும் தாழ் மற்றும் உயரமுக்க வலயங்கள்
3. தாழ் அகலக் கோடுகளில் உருவாக்கப்படும் உராய்வு விசை

4. வெவ்வேறு அகலக்கோடுகளில் காணப்படும் கொரியோலிஸ் விசை
5. வெவ்வேறு அகலக்கோடுகளில் இடம்பெறும் மைய நாட்ட விசை

8. நிரம்பியநிலை மட்டத்தினை அடையும் வரை எழுச்சியடையும் வளியின் வெப்பநிலையில் ஏற்படும் படிப்படியான வீழ்ச்சியினைக் குறிப்பது.

1. வெப்பஞ்செல்லாநிலை நழுவுவீதம் 2. சூழலியல் நழுவுவீதம்
3. ஈரவெப்பஞ்செல்லா நழுவீதம்
4.வரண்ட வெப்பஞ்செல்லா நழுவுவீதம் 5. நிலையற்ற நழுவீதம்

9. படிவு வீழ்ச்சியினை எதிர்வு கூறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வளிமண்டல ஈரப்பதனில் பொருத்தமான அளவீடு எது?

1. தனியீரப்பதன் 2. சாரீரப்பதன் 3. தன்னீரப்பதன்
4. நிரம்பல்நிலை ஈரப்பதன்
5. மிகைக் குளிர்ச்சி ஈரப்பதன்

10. இலங்கையில் இரண்டாவது இடை – மொன்சூன் காலம் என்பது.

1. ஒக்டோபரிலிருந்து நவம்பர் வரை
2. மர்ச்சிலிருந்து ஏப்பிரல் வரை
3. மேயிலிருந்து செப்தம்பர் வரை
4. டிசம்பரிலிருந்து பெப்ரவரி வரை
5. நவம்பரிலிருந்து ஜனவரி வரை

11. இலங்கையின் பிரதான மேற்க்காவுகை மழைவீழ்ச்சிப் பருவகாலம் என்பது.

1. மே தொடக்கம் செப்தம்பர் 2. மார்ச் தொடக்கம் ஏப்பிரல்
3. ஒக்டோபர் தொடக்கம் நவம்பர்
4. ஜனவரி தொடக்கம் பெப்ரவரி 5. டிசம்பர் தொடக்கம் ஜனவரி

12. எல் - நினோ தோற்றப்பாடு நிகழ்வதற்கான காரணம்.

1. இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையில் சடுதியான வீழ்ச்சி

2. பசுப்பிக் சமுத்திரத்தின் வெப்பநிலையில் படிப்படியான வீழ்ச்சி

3. அத்திலாந்திக் சமுத்திரத்தின் வெப்பநிலையின் படிப்படியான அதிகரிப்பு
4. பசுபிக் சமுத்திர வெப்பநிலையின் சடுதியான அதிகரிப்பு

5. இந்து சமுத்திரத்தின் வெப்பநிலையின் படிப்படியான அதிகரிப்பு

13. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் வரண்ட காலநிலைகளின் உப பிரிவுகளுக்குரிய குறியீடுகளை சரியாகக் காட்டுவது.

1. Af,Am,Aw
2. BS,BW
3. Df,Dw
4. Cf,Cw,Cs
5. ET,EF

14. பின்வருவனவற்றுள் எது, வளிமண்டல சுற்றோட்டப்பாங்குகள் பற்றிய ஆய்வில் ஆரம்ப காலப்பங்களிப்பினை வழங்கிய மூன்று காலநிலையியலாளர்களின் பெயர்களைச் சரியாகத் தருகிறது?

1. ஹட்லி,பெரல்,றொஸ்பி
2. பெரல்,றொஸ்பி,ரொவார்த்தா
3. றொஸ்பி, வெரத்தா, கெப்பன்
4. ரொவார்த்தா, ஹட்லி,மில்லர்
5. தோண்வைற்,ரெவார்த்தா,ஹட்லி

15. பின்வருவனவற்றுள் எது, பூகோள வெப்பமடைதலுக்குப் பங்களிக்கும் மூன்று பிரதான பச்சை விட்டு வாயுக்களின் பெயர்களை அவற்றின் சதவீதப்படி இறங்கு வரிசையில் தருகிறது?

1. காபனீரொட்சைட், மெதேன், நைதரஸ் ஒக்சைட்
2. காபனீரொடசைட், குளோரோ புளோரோ காபன்கள், மெதே
3. குளோரோ புளோரோ காபன்கள், மெதேன், நைதரஸ் ஒக்
4. மெதேன், நைதரஸ் ஒக்சைட், நீராவி
5. மெதேன், நைதரஸ் ஒக்சைட், ஆர்கன்

16. வடகோளத்திலுள்ள வியாபாரக் காற்றுக்கள் இங்கிருந்து வீசுகின்றன.

1. தென் - மேற்கிலிருந்து (5° - 30° இடையில்)
2. வட – கிழக்கிலிருந்து (5° - 30° இடையில்)
3. தென் - மேற்கிலிருந்து (10° - 30° இடையில்)
4. வட – கிழக்கு (0° - 30° இடையில்)
5. வட – மேற்கிலிருந்து (0° - 30° இடையில்)

17. எல் - நினோ தோற்றப்பாட்டுக்குப் பொறுப்பான காரணியைப் பின்வரும் விடைகளுள் எது சரியாகக் கூறுகின்றது?

1. கிழக்குப் பசுபிக் சமுத்திரம் வெப்பமடைவதினால் உருவாக்கப்படும் அசாதாரண ஒரு சாமனிலைப் பாங்கு
2. பசுபிக் சமுத்திரத்தின் வானிலைப்பாங்கில் இடம்பெறும் பருவகால மாற்றங்கள்
3. அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள அசாதாரண ஒரு வானிலைப் பாங்கு
4. பசுபிக் சமுத்திரத்தின் வானிலைப்பாங்கில் நாளாந்த மாற்றங்கள்
5. அத்திலாந்திக் சமுத்திரத்தின் வானிலைப் பாங்கில் பருவகால மாற்றங்கள்

18. இலங்கையில் சூறாவளிகள் பிரதானமாக இடம்பெறும் காலப்பகுதியானது.

1. மே தொடக்கம் யூன் வரை
2. மார்ச் தொடக்கம் ஏப்பிரல் வரை
3. ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர்
4. டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி
5. ஓகஸ்ட் தொடக்கம் செப்டம்பர் வரை

19. பின்வருவனவற்றுள் எது முறையே ஞாயிற்று அண்மைநிலை ஞாயிற்று சேய்மைநிலை ஆகியவற்றின் நிகழ்வு நாட்களை சரியாகத் தருகின்றது?

1. யூன் 4ம் ஜனவரி 3ம் ஆகும்
2. ஜனவரி 3ம் யூலை 4ம் ஆகும்
3. டிசம்பர் 21ம் செப்டம்பர் 21ம் ஆகும்
4. யூலை 4ம் செப்ரம்பர் 21ம் ஆகும்

20. வடமுனைவில் யூன்21ஆம் திகதி பகற்பொழுது நிகழ்வது

1. பூச்சிய மணித்தியாலம்
2. 12 மணித்தியாலம்
3. 18 மணிதியாலம்
4. 24 மணித்தியாலம்

21. காற்றுச் சுற்றோட்டத்தினை பாதிக்கின்ற இரு முக்கிய காரணிகளாவன.

1. புவிச்சுழற்சியும், சூரியனை நோக்கிய அதன் சாய்வும்
2.கண்டங்கள், சமுத்திரங்களின் சமமற்ற பரம்பல்
3. அமுக்கச்சாய்வு விசையும் கொறியோலிஸ் விசையும்
4. உராய்வும் புவிச்சுழற்சியும்


22. மேற்காவுகை மழையுடன் தொடர்புபட்ட பிரதான முகிழ் வகை

1. கீற்று முகிழ்
2. உயர்படை முகிழ்
3. உயர்திறன் முகிழ்
4. தாழ்படை முகில்

23. 85 சதவீதத்திற்கு மேற்பட்ட அல்பிடோ இடம்பெறுவது

1. நீர் மேற்பரப்பிலாகும்
2. மழைப்பனி போர்வையிலாகும்
3. பாலைவனங்களிலாகும்
4. ஈரநிலங்களிலாகும்

24. இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடம் காற்றமுக்கத் தொகுதி ஒன்றினைக் காட்டுகிறது. பின்வரும் விடைகளில் எது வரை படத்தினை சரியாகக் எடுத்துக் காட்டி நிற்கின்றது.



1. வட துருவத்தில் உள்ள சூறாவளி ஒன்று
2. தென் துருவத்தில் உள்ள சூறாவளி ஒன்று
3. வட துருவத்தில் உள்ள முறண் சூறாவளி ஒன்று
4. தென் துருவத்திலுள்ள முறண் சூறாவளி ஒன்று

25. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் "C" அடையாளம் குறிப்பது

1. அயனவலயக் காலநிலை
2. இளம் சூடான இடைவெப்ப வலயக் காலநிலை
3. உலர் காலநிலை
4. முனைவுக் காலநிலையினை

26. இடை அயன ஒருங்கல் (ITCZ) என்பது

1. அயனப்பிரதேசத்தில் உள்ள நிலையான உயர் அமுக்கத் தொகுதி ஒன்றாகும்
2. உயர் அகலக் கோடுகளிலிருந்து அயன அயற் பிரதேசத்தினை நோக்கி அசைகின்ற
   தாழ் அமுக்க வலயம் ஒன்றாகும்
3. அயனப் பிரதேசத்திற்குள் பருவகால ரீதியாக அசைகின்ற தாழ் அமுக்க வலயம் ஒன்றாகும்
4. வெப்ப மற்றும் குளிர் காற்றுத் திணிவுள் சந்திக்கின்ற பிரிதள வலயம் ஒன்றாகும்

27. கரீபியன் மற்றும் சீனக் கடல்களில் காணப்படுகின்ற அயன வலய சூறாவளிகள் எனத் தெரிந்து கொள்ளப்படுபவை முறையே

1. தைப்பூன் மற்று வில்லி வில்லி ஆகும்
2. ஹரிக்கேன் மற்றும் தைபூன் ஆகும்
3. ரொனாடோ மற்றும் ஹரிக்கேன்ஆகும்
4. தைபூன் மற்றும் ரொனாடோ

28. அமில மழைக்குக் காரணமாக அமைகின்ற இரு பிரதான வாயுக்களாவன.

1. காபனீரொடசைட்டும் ஐதரசனும் ஆகும்
2. கந்தகவீரொட்சைட்டும் நைதரசன் ஒட்சைட்டும் ஆகும்
3. காபனீரொட்சைட்டும் ஒட்சிசனும் ஆகும்
4. கந்தகவரீரோட்சைட்டும் ஐதரசனும்

29. பின்வரும் விடைகளில் எது இலங்கையில் இடைக்காலநிலை வலயத்தில் அமைந்துள்ள இரு நகரங்களின் பெயர்களைச் சரியாகத் தருகின்றது?

1. காலி, இரத்தினபுரி ஆகும் 2.குருநாகல், பதுளை ஆகும்
3. மொனராகலை, ஹம்மாந்தோட்டை
4. இரத்தினபுரி, களுத்துறை

30. கோள வெப்ப வரவு செலவில் அல்பிடோவின் (Albedo) வீதாசாரம் யாது?

1. 20% 2. 30% 3. 50% 4. 70%

31. கடல்சார் அயனக் காற்றுத் திணிவுகள் கண்டமுனைவுக் காற்றுத் திணிவுகளைச் சந்திக்கும் பொழுது உருவாகுவது

1. பசுபிக் ஆட்டிக் பிரிதளம்
2. அத்திலாந்திக் முனைவுப் பிரிதளம்
3. அத்திலாந்திக் ஆட்டிக் பிரிதளம்
4. மத்திய தரைப்பிரிதளம்

32. கெப்பனின் காநிலை வகைப்பாட்டில் ET வகை பிரதிநிதித்துவப்படுத்துவது

1. உயர்நிலைக் காலநிலையாகும்
2. தைக்கா காலநிலையாகும்
3. பருவக்காற்று/மொன்சூன் காலநிலையாகும்
4. துந்திராக் காலநிலையாகும்

33. பெரலின் விதி (Ferrel's Law) தொடர்பு படுவது
1. அமுக்க சாய்வு விகித விசையுடனாகும்
2. உராய்வு விசையுடனாகும்
3. கொறியோலிஸ் விசையுடனாகும்
4. மையை நாட்ட விசையுடனாகும்

34. குறிப்பிட்ட எந்த வெப்பநிலையிலும் வளி கொள்ளக் கூடிய நீராவியின் உயர அளவை தெரிந்து கொள்வது

1. வாடலடநிலை என்றாகும்
2. நிரம்பிய நிலை என்றாகும்
3. பனிபடு நிலை என்றாகும்
4. உருகுநிலை என்றாகும்

35. சமுத்திரத்தினால் பெறப்படும் ஞாயிற்று வெப்பத்தில் 90 சதவீதம் உறிஞ்சப்படும் ஆழம்

1. 80 அடி ஆகும் 2. 70 அடி ஆகும் 3. 60 அடி ஆகும்
4. 50 அடி ஆகும்

36. பிலிப்பைன்ஸ், ஜப்பான், சீனா ஆகியவற்றைத் தாக்கும் அயனச் சூறாவளிகள் தெரிந்து கொள்ளப்படுவது.

1. ரொனோடா என்றாகும் 2. இடிமின்னற் புயல் என்றாகும்
3. தைபூன் என்றாகும்
4. ஹரிக்கேன்ஸ் என்றாகும்

37. பின்வரும் கூற்றுக்களுள் எக்கூற்று அமில மழைவீழ்ச்சி காரணமாக இரண்டு மூலக் கூறுகளைச் சரியாகத் தருவது

1. ஓசோன், காபனீரொட்சைட்
2. கந்தகவீரொட்சைட்டு, நைதரசன் ஒட்சைட்டு
3. நைதரசன் ஒட்சைட்டு, நீராவி
4. ஓசோன், காபனோரொடசைட்டு


38. இலங்கையைப் பாதிதுள்ள சூறாவளிகளுள் அதிகமானவற்றின் திசை வங்காள விரிகுடாவிலிருந்து

1. தென்கரையோரம் நோக்கி அமைந்துள்ளமை
2. வட – கிழக்குக் கரையோரம் நோக்கியதாயமைந்துள்ளது
3. மேற்கு கரையோரம் நோக்கியதாயமைந்துள்ளது
4. வடமேற்கு கரையோரம் நோக்கியதாமைந்துள்ளது

39. யூன் 21 ஆம் திகதி வட முனைவில் (North Pole) பகற் பொழுது ஒன்று கொண்டிருப்பது

1. பூச்சிய மணித்தியாலம்
2. பன்னிரண்டு மணித்தியாலம்
3. பதினெட்டு மணித்தியாலம்
4. இருபத்தினான்கு மணித்தியாலம்

40. தரப்பட்டுள்ள வரிப்படம் வட துருவததில் உள்ள பொதுவான காற்றுப் பாங்கினைக் காட்டுகின்றது. மத்திய கோட்டிலிருந்து வடமுனைவு வரையிலான காற்றுப் பாங்கின் சரியாக வரிசை முறையினைத் தரும் விடை பின்வருவனற்றுள் யாது?



1. தென்மேலைக் காற்றுக்கள்,வடமுனைவுக் கீழைக்காற்றுக்கள், வடகீழ் வியாபாரக்காற்றுக்கள்
2. வடகீழ் வியாபாரக்காற்றுக்கள்,தென்மேலைக் காற்றுக்கள், வடமுனைவுக் கீழைக்காற்றுக்கள்
3. வடமுனைவுக் கீழைக்காற்றுக்கள்,வடகீழ் வியாபாரக்காற்றுக்கள், தென்மேலைக் காற்றுக்கள்
4. வடகீழ் வியாபாரக்காற்றுக்கள்,வடமுனைவுக்கீழைக்காற்றுக்கள், தென்மேலைக் காற்றுக்கள்

41. உயர்வான வருடாந்த வெப்பநிலை வேறுபாடுகள் காணப்படுகின்ற காலநிலை வகையாக இருப்பது

1. நனிகுளிர் கண்ட உள்ளூர் காலநிலை
2. பருவக்காற்று/மொன்சூன் காலநிலை
3. மத்தியகோட்டுக் காலநிலை
4. மத்திய தரைக்காலநிலை

42. கெப்பனின் காலநிலை வகைப்பாட்டில் துருவக் காலநிலையில் உபபிரிவுகளின் குறியீடுகளை காட்டி நிற்கும் விடை பின்வருவனவற்றுள் யாது?

1. ETயும்EFஉம்
2. BWவும்BSஉம்
3. Af,Amஉம்Aw
4. Cfa,Cw,CfbCfஉம்Csஉம்

43. மத்தியதரைக் காலநிலையில் மிகவும் முனைப்பான பண்புகளைக் கொண்டிருக்கும் கூற்று பிவருவனவற்றுள் யாது?

1. வெப்ப ஈரக்கோடையும் குளிரான உலர்மாரியும்
2. மழையுடன் கூடிய கோடையும் மழையுடன் கூடிய மாரியும்
3. உயர்வான நாளுக்குரிய வெப்பநிலை வீச்சு
4. வெப்ப உலர் கோடையும் மழையுடன் கூடிய மாரியும்

44. அமில மழைக்குக் காரணமாக அமைவது

1. அயன மழைக்காடுகள் அகற்றப்படுகின்றமை
2. அணுவாயுதங்களின் அதிகரித்த பரிசோதனை
3. மேல் வளிமண்டலத்தில் ஓசோன் அழிவு
4. அதிகளவு கந்தகவீரொட்சைட்டினை உள்ளடக்கியிருக்கின்ற எரிபொருட்கள் எரிப்பு

45. பின்வரும் வளிமண்டல பொதுச் சுற்றோட்டத்தில் உள்ள பிரதான காற்றுத் தொகுதியினைச் சரியாக இனங்காணும் விடை யாது?

1. வியாபாரக்காற்று, மேலைக்காற்று, முனைவுக்காற்று
2. தென்கீழ்வியாபாரக்காற்று, அயனச்சூறாவளி, வடகீழ் வியாபாரக்காற்று
3. பருவக்காற்று, மேலைக்காற்று, முனைவுக்காற்று
4. வடகீழ்வியாபாரக்காற்று, மேலைக்காற்று, சூறாவளி

46. ஹரிக்கேன்ஸ் எனப்படுவது

1. அயனச்சூறாவளிகள்
2. வங்காள விரிகுடாவில் வளிஇறக்கம்
3. இடைவெப்ப வலய சூறாவளி
4. முரண் சூறாவளி


47. கெப்பனின் காலநிலை வகைப்பாட்டின் Af காலநிலை வகைக் குறிப்பது

1. ஈர கண்டக் காலநிலை
2. ஈர அயனக் காலநிலை
3. ஈர இடைவெப்ப வலய காலநிலை
4. ஈர துருவக் காலநிலை

48. ஓசோன் படையின் அழிவினால் ஏற்படக்கூடிய விளைவுகள் என நம்பப்படுபவை

1. தோல் புற்றுநோயும் பறவைக் காய்ச்சலும்
2. தோல்புற்று நோயும் விழிவெண்படல நோயுமாகும்
3. தோல் புற்று நோயும் குக்கல் நோயும்
4. தோல் புற்று நோயும் எயிட்ஸ் நோயும்

49. கீழே தரப்பட்டுள்ள வரைபடம் சூறாவளி ஒன்றினைக் குறிப்பிடுகின்றது அதில் நிழற்றப்பட்ட பகுதி அடையாளப்படுத்தப்படுவது.



1. தாழமுக்கப் பகுதி ஒன்றினை
2. உயரமுக்கப் பகுதி ஒன்றினை
3. முகப்பு ஒன்றினை
4. மறைந்த முகப்பு ஒன்றினை

50. மழைவீழ்ச்சிச் செறிவு என்பது

1. மாதமொன்றில் மழை பெய்யும் நாட்களின் எண்ணிக்கை
2. வருடமொன்றில் மழை பெய்யும் நாட்களின் எண்ணிக்கை
3. குறிப்பிட்ட கால எல்லையினுள் பெறப்படும் மழைவீழ்ச்சி அளவு
4. குறிப்பிட்ட பிரதேசத்தின் மழை வீழ்ச்சி அளவு

51. பின்வருவனவற்றுள் உலகில் ஆகக்கூடிய (1) மழைவீழ்ச்சியினையும் ஆகக்கூடிய வெப்பநிலையினையும் (11) பெறும் இடங்களின் பெயர்களை ஒழுங்கு வரிசைப்படி காட்டுவது எது?

1. (1) வட்டவளை (11) சார்ஜா
2. (1) சீராப்பூஞ்சு (11) ஜக்கோபாபாத்
3. (1) சீராப்பூஞ்சு (11) சார்ஜா
4. (1) வட்டவளை (11) ஜக்கோபாபாத்

52. அருவித்தாரை என்பது

1. அண்டவெளியில் ஒளி வீசுகின்ற ஒரு நீள்வாற் பகுதி
2. இடையிடையே கொதிநீரை வேகமாகவும் பெருமளவிலும் வெளிவிடும் வெந்நீரூற்று
3. ஒரு ஜெட் விமானத்தின் ஒடுங்கிய நீள்வாற் பகுதி
4. மேல் வளிமண்டலத்தில் விரைவாக இயங்கும் ஒரு காற்றோட்டம்

53. கெப்பனின் காலநிலை பாகுபாட்டில் உள்ள சூடான இடை, அகலக்கோட்டுக் காலநிலையின் உபபிரிவுகளைப் பின்வரும் குறியீட்டுக் குழுக்களில் எக்குழு குறித்து நிற்கின்றது?

1. BW,BS
2. ET,EF
3. Ca,Cb,Cs
4. Af,Am,Aw

54. வடபசுபிக்கின் மேற்குப் பகுதிகளிலும் சீனக்கடலிலும் ஏற்படும் அயனச் சூறாவளிகளைக் குறிப்பது


1. தொனாடோ (சூரைப் புயல்)
2. இடிமின்னற் புயல்
3. தைபூன்
4. ஹரிக்கேன்(பெரும்புயல்)

55. குளோரோ புளோரோ காபன் (CFC) பளன்பாட்டைக் கட்டுப்படுத்தியது

1. ஜெகனஸ்பேக் உச்சி மாநாடு
2. சார்க் கூட்டொப்பந்த மூலப்படி
3. மொன்றியல் கூட்டொப்பந்த மூலப்படி
4. பாலி இணக்க ஒப்பந்தம்

56. ஒரு முகப்பினது விருத்தியின் ஆறு (6) நிலைகள் A,B,C,D,E,F என கீழே உள்ள விளக்கப்படத்தில் தரப்பட்டுள்ளது கீழே தரப்பட்டுள்ள விடைகளில் , முகப்பின் விருத்தியினை ஒழுங்கு வரிசைப்படி சரியாகக் காட்டும் விடை எது?

1. C,A,E,B,D,F
2. A,C,B,D,F,E
3. A,B,D,E,F,C
4. F,E,D,C,A,B



57. "கோறியோலிஸ்" (coriolis) விசை குறிப்பது

1. புவி சுழலும்போது காற்றுக்களின் திசை மாற்றப்படுவதை
2. இந்து சமுத்திரத்தில் அயனச் சூராவளி உருவாவதை
3. வளிமண்டல அமுக்கச்சாய்வு விகிதங்களின் திசை மாற்றப்படுவதை
4. புவிச்சாய்வினால் காற்றுக்களின் திசை மாற்றப்படுவதை

58. பின்வருவனவற்றில் எக்கூற்று இடை அயன ஒருங்கல் வலயத்தின் (ITCZ) பிரதான பண்புகளை சரியாக விவரிக்கின்றது?

1. வியாபாரக்காற்று விலகிச்செல்லும் தாழமுக்க வலயம்
2. அருவித்தாரை காணப்படும் உயரமுக்க வலயம்
3. சூராவளி தோற்றமுறும் உயரமுக்க வலயம்
4. வியாபாரக் காற்று ஒருங்கும் தாழமுக்க வலயம்

59. மேற்காவுகை மழை பிரதானமாகத் தொடர்புபடுத்தப்படுவது

1. சூராவளியுடன் 2. தாழமுக்கத்துடன்
3. வியாபாரக் காற்றுடன்
4. குத்தாக மேலெழும்பும் காற்றியக்கத்துடன்

60. ''கச்சான்'' என்பது

1. தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகதியினூடாக வீசும் வரண்ட காற்றாகும்
2. இலங்கையின் வடமேற்குப் பகுதிக்கு மழையைக் கொடுக்கும் வரண்ட காற்றாகும்
3. இடைப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் காணப்படும் காற்றாகும்
4. இலங்கையின் தென்கிழக்குப் பகுகிகளில் கடும் மழையை உருவாக்கும் வியாபாரக் காற்றாகும்

61. இடைவெப்ப வலயப் பிரதேசங்கள் இரு கோளார்தத்ங்களிலும்

1. 10பாகை முதல் 20பாகை அகலக்கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளது
2. 20பாகை முதல் 30பாகை அகலக்கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளது
3. 30பாகை முதல் 45பாகை அகலக்கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளது
4. 30பாகை முதல் 60பாகை அகலக்கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளது

62. இலங்கையில் கூடுதலாக வருடாந்த மழைவீழ்ச்சியினைப் பெறும் இடம் யாது?

1. வட்டவளை 2. றக்கல 3. தெனியாய
4. இரத்தினபுரி

63. அமில மழைகக்கு காரணமாக அமைந்துள்ள முக்கியமான இரு வாயுக்களாவன

1. காபனீரொட்சைட்டும் ஐதரசனும்
2. கந்தகவீரொட்சைட்டும் நைதரசனின் ஒட்சைட்டுகளும்
3. காபன்ரொட்சைட்டும் ஒட்சிசனும்
4. கந்தகவீரொட்சைட்டும் ஐதரசனும்

64. ஹீலியம் என்பது

1. வட அரைக்கோளத்திலிருந்து தென்னரைக்கோளத்தை நோக்கி வீசும் ஒரு கடும் குளிர் காற்று
2. அழுகிய சேதனப்பொருட்கள்
3. வரண்ட காற்றில் காணப்படும் ஒரு அரிய (அருவாயு)
4. சூரியனைச் சுறறிக் காணப்படும் ஒரு ஒளி வலயம்

65. பிலிப்பைன்ஸ, யப்பான், சீனக்கடல்களில் தோன்றும் அயனச் சூராவளிகள் பொதுவாக

1. தொனோடாக்கள் (Tornados)
2. விலிவிலிஸ் (Willie-Willies)
3. தைபூன்ஸ் (Typhoons)
4. ஹறிக்கேன்ஸ் (Hurricanes)

66. வட கோளார்த்தத்தில் மேற்பரப்புக் காற்றுக்கள் அமுக்க இறக்கத்தினுள்

1. வலஞ் சுழியாக வீசுகின்றன
2. இடஞ் சுழியாக வீசுகின்றன
3. நிலைக்குத்தான திசையில் வீசுகின்றன
4. கிடைத்திசையில் வீசுகின்றன


67. பின்வரும் கூற்றுகளுள் எக்கூற்று அருவித்தாரையை விளக்குகின்றது?

1. காற்றிடையூடாக வீசும் கடும் காற்று
2. பாலைவனத்தில் காணப்படும் பருவகால அருவி
3. காஸ்ட் பிரதேசத்தில் காணப்படும் தரைக்கீழ் அருவி
4. உயர் அகலக்கோடுகளிற்கு மேல் மேற்கிலிருந்து கிழக்காக வீசும் ஒரு கடும் காற்று

68. பச்சை வீட்டு வாயுக்கள இரண்டும்

1. காபன்மொனக்சைட்டும் ஐதரசனுமாகும்
2. காபனீரொட்சைட்டும் நீராவியும்
3. காபன்மொனக்சைட்டும் ஒட்சிசனுமாகும்
4. மீதேனும் நைதரசனுமாகும்


69. தரப்பட்டுள்ள வரைபடத்தில் வளிமண்டலத்தின் முக்கல மாதிரியம் காட்டப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களுள் எக் கூற்று இக்கலங்களின் மத்திய கோட்டிலிருந்து முனைவு வரையுள்ள அடுத்ததொடரை சரியாகத் தருகின்றது.



1. ஹட்லிகலம், பெரல்கலம், முனைவுக்கலம்
2. பெரல்கலம், ஹட்லிகலம், முனைவுக்கலம
3. ஹட்லிகலம், முனைவுக்கலம், பெரல்கலம்
4. முனைவுக்கலம், பெரல்கலம், ஹட்லிகலம்

70. கீழே தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள வட அரைக்கோளர்தத்திற்கான முரண் சூராவளியொன்றின் காற்றுக்கள் மையத்திலிருந்து கடிகாரத்திசையில் வீசுவதற்கான காரணம்

1. கொறியோலிஸ் விசை
2. மறைவெப்பம்
3. நழுவுவீதம்
4. ஈர்ப்பு விசை




71. வற்றுப் பெருக்குகளை முக்கியமாக ஏற்படுத்துவது

1. கடும் சமுத்திர நீரோட்டம்
2. கடல் மேற்பரப்பில் கடும் காற்று
3. சூரிய, சந்திரனின் ஈரப்பு விசை
4. உயரமுக்கவலயங்களின் விருத்தி

72. போபோட் (Beaufort) அளவுத்திட்டம் பயன்படுத்தப்படுவது

1. மண்ணின் காரத்தன்மையை அளவிடுவதற்கு
2. தரை உயரத்தை அளவிடுவதற்கு
3. நீரின் வெப்பத்தை அளவீடுவதற்கு
4. காற்றின் வேகத்தினை அளவிடுவதற்கு

73. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் A,B,C என்பவற்றின் சரியான ஒழுங்கினைத் தரும் கூற்று



1. (A) வெப்பப் பிரிதளம், (B) குளிர்ப் பிரிதளம், (C) தாழமுக்க மையம்
2. (A) தாழமுக்க மையம், (B) வெப்பப் பிரிதளம், (C) குளிர்ப் பிரிதளம்
3. (A) குளிர்ப் பிரிதளம், (B) தாழமுக்க மையம், (C) வெப்பப் பிரிதளம்
4. (A) வெப்பப் பிரிதளம், (B) தாழமுக்க மையம் (C) குளிர்ப் பிரிதளம்

74. கீழே தரப்பட்டுள்ள குறியீட்டுச் சோடிகளில் எச்சோடி கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டின் முனைவுக் காலநிலையின் உபபிரிவுகளைக் காட்டுகின்றது?

1. ET, EF 2. BW,BS 3. Af,Am 4. Dfa,Dwa

75. இலங்கையின் மழைவீழ்ச்சியின் முக்கியமான இரு மூலகங்களாவன

1. பருவக்காற்றுக்களும், மேற்காவுகை நடவடிக்கைகளும்
2. பருவக்காற்றுக்களும், போன்காற்றுக்களும்
3. பருவக்காற்றுக்களும், தைபூன்களும்
4. மேற்காவுகை நடவடிக்கைகளும், தொனோடோக்களும்

76. வளிமண்டலத்தின் பச்சை வீட்டு வாயுக்களைக் கொண்ட சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

1. காபனீரொட்சைட்டு, மீதேன், ஒக்ஸிஜன்
2. ஒக்ஸிஜன், கிறிப்டோன், காபனீரொட்சைட்டு
3. கிறிப்டோன், காபனீரொட்சைட்டு, ஹீலியம்
4. காபனீரொட்சைட்டு, மீதேன், நைதரஸ் ஒக்சைட்டு

77. வளிமண்டலததில் மீதேன் வாயுவினது (CH_4) செறிவினை அதிகரிக்கும் நடவடிக்கைகள் எவை?

1. தரிசு நிலங்களில் மீள்காடாக்கம்
2. கடல் நீரின் உவர்த்தன்மையை அகற்றுதல்
3. இரை மீட்கும் விலங்குகளின் மந்தையாக்கம்
4. இறப்பர் பயிர்ச்செய்கை

78. பச்சை வீட்டு விளைவென்றால்

1. தாழ் வளிமண்டலத்திலிருந்து உயர் வளிமண்டலத்திற்குச் செல்லும் வாயுக்களின் அசைவுகள்
2. வாயுக்களின் கலப்பு
3. மேலதிகமான வெப்பத்தினை வளிமண்டலத்தில் தேக்கி வைத்தல்
4. சிற்றலைகளினால் வெப்ப்த்தினைப் பெறல்

79. மத்திய கோட்டமைதி வலயம் என்றால்

1. மகரக் கோட்டைச் சூழவுள்ள பகுதி
2. மென்காற்றுக்கள் வீசும் அயன அயல் ஒருங்கல் வலயம் (ITCZ)
3. இடை வெப்ப வலயத்தில் செயற்றிறமை கொண்ட சூறாவளிகள் உள்ள வலயம்
4. உப – அயன உயரமுக்க வலயம்

80. பெரும் புயல்களாவன (Hurricane)

1. அயனச் சூறாவளிகள்
2. இடைவெப்பவலயச் சூறாவளிகள்
3. வங்காள விரிகுடாவின் தாழமுக்கங்கள்
4. முரண் சூறாவளிகள்

81. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு கூடுதலாக திரளுவதன் விளைவாக

1. ஈரப்பதன் குறையும்
2. வெப்பம் அதிகரிக்கும்
3. கூடுதலாக மிதக்கும் பனிக்கட்டிகள் உருவாம்
4. அமில மழை பெய்யும்

82. "போபர்ட்" அளவுத்திட்டத்தினால் அளக்கப்படுவது

1. அலைச் செயற்பாடு
2. மண்ணின் உவர்த்தன்மை
3. காற்றின்வேகம்
4. வளிமண்டலத்தில் CO_2 அளவு

83. "புவியீர்ப்புக் காற்றுக்கள்" என்பவை

1. கடலிலிருந்து நிலத்தை நோக்கி வீசும் ஈரப்பதன் செறிந்த காற்றுக்களாகும்
2. நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசும் வரண்ட காற்றுக்களாகும்
3. புவியீர்ப்பின் கீழ் மலைச்சாய்வுகளில் கீழ் நோக்கி வீசும் ஓரிட்க் காற்றுக்களாகும்
4. மலைச் சாய்வுகள் வழியாக மேல் நோக்கி அவீசும் காற்றுக்களாகும்

84. கரீபியன் கடலிலும் வளைகுடா கரையோரப் பிரதேசத்திலும் தோன்றும் அயன மண்டலச் சூறாவளிகள்

1. தைபூன் என அழைக்கப்படும்
2. ஹறிக்கேன் என அழைக்கப்படும்
3. வில்லி – விலிஸ் என அழைக்கப்படும்
4. தோனாடோ என அழைக்கப்படும்

1.

I. இலங்கையின் காலநிலையைப் பாதிக்கும் நான்கு பிரதான காரணிகளைப் பெயரிடுக.

II. மேலே I இல் உம்மால் குறிப்பிட்டவற்றுள் ஏதேனும் இரண்டு காரணிகளைத், தெரிவுசெய்து, அவை இலங்கையின் காலநிலையைப் பாதிக்கின்ற விதம் பற்றி விளக்குக.

III. இலங்கையின் ஈரவலயத் தாழ்நிலப் பிரதேசக் காலநிலையின் மூன்று பிரதான பண்புகளை விவரிக்குக.

IV. காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீகச் செயன்முறைகள் மூன்றினை ஆராய்க. **(2018 August)**

2.

I. வானிலை மற்றும் காலநிலைக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக.

II. காலநிலையினைக் கட்டுப்படுத்தும் மூன்று காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக.

III. கெப்பன் வினா

IV. இலங்கையின் வருடாந்த மழைவீழ்ச்சியின் பருவகாலப் பாங்கினை விவரிக்குக. **(2016 August)**

3.

I. காலநிலையைக் கட்டுப்படுத்தும் நான்கு காரணிகளைப் பெயரிடுக.

II. பூகோள காலநிலை மாற்றத்துக்குப் பொறுப்பான இரண்டு இயற்கைக் காரணிகளையும் இரண்டு மானிடக் காரணிகளையும் விவரிக்குக.

III. பூகோள காலநிலை மாற்றத்தின் நான்கு விளைவுகளை ஆராய்க.

IV. பூகோள காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மோசமான தாக்கங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள மூன்று நடவடிக்கைகளை விவரிக்குக. **(2014 August)**

4.

I. ''காலநிலை மாற்றம்'' என்பது எதனைக் கருதுகின்றது என்பதை விளக்குக.

II. காலநிலை மூலங்கள் நான்கினைப் பெயரிட்டு, காலநிலை மாற்றத்தினை அடையாளம் செய்வதற்கு அக்காலநிலை மூலங்களுள் ஏதாவது ஒன்றினை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை உதாரணங்களுடன் ஆராய்க.

III. கெப்பன் வினா

IV. அட்டவணை I இனை அடிப்படையாகக் கொண்டு, மழைவீழ்ச்சிப் பருவத்தினை அடையாளம் செய்து, அப்பருவத்துடன் இணைந்து காணப்படும் இலங்கையின் மழைவீழ்ச்சியின் இடஞ்சார்ந்த பரம்பல் பாங்கின் இரண்டு அம்சங்களை ஆராய்க. **(2012 August)**

5.

I. கெப்பனின் காலநிலை வினா **(2011 Augut)**

6.

I. கெப்பனிக் காலநிலை வினா **(2010 August)**

7.

I. கெப்பனின் காலநிலை வினா

II. கெப்பனின் காலநிலை வினை **(2009 August)**

III. தென் ஆசியாவில் இடம்பெறுகின்ற எவையேனும் மூன்று காலநிலை அனர்த்தங்களை உதாரணங்கள் தந்து ஆராய்க.

8.

I. கெப்பனின் காலநிலை வினா **(2008 August)**

9.

I. வளிமண்டலத்தின் வெப்பப்பரிமாற்றச் செயன்முறைகள் நான்கினைப் பெயரிடுக.

II. இந் நான்கு வெப்பப்பரிமாற்றச் செயன்முறைகளையும் சுருக்கமாக ஆராய்க.

II. வளிமண்டல வெப்ப வரவு செலவினை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. **(2007 August)**

10.

I. கெப்பன் வினா **(2006August)**

11.

I. அயனப் பிரதேசத்திற்குள் காணப்படும் காற்றுப் பாங்குகளை விளக்கப்படங்களுடன் வரைந்து விளக்குக.

II. அயனச் சூறாவளிகளை இனங்காணப் பயன்படுத்தும் நான்கு பெயர்களைத் தருக.

III. அயனச் சூறாவளிகள் எவ்வாறு பௌதீக, மானிட சூழல்களை பாதிக்கின்றன என்பது பற்றி குறிப்பான உதாரணங்களுடன் ஆராய்க. **(2006August)**

12.

I. கெப்பனின் காலநிலை வினா **(2005 August)**

13.

I. கெப்பனின் காலநிலை வினா **(2004 August)**

14.

I. கெப்பனின் காலநிலை வினா **(2003 August)**

15.

I. கெப்பனின் காலநிலை வினா **(2002 August)**

16.

I. கெப்பனின் காலநிலை வினா **(2001, 2000 August)**